# 2016 ஆகஸ்ட் 25ஆந் திகதியின் சபை அலுவல்கள்

**திகதி :** 2016-08-25

கௌரவ கரு ஜயசூரிய, சபாநாயகர் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

**சபாநாயகர் பத்திரங்களைச் சமர்ப்பித்தல்**

இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் -

 2012 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் முதலாவது தொகுதியின் XIV ஆம் பகுதி;
 2013 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் முதலாவது தொகுதியின் XI, XII மற்றும் XIII ஆம் பகுதிகள்; மற்றும்
 2014 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் முதலாவது தொகுதியின் III ஆம் பகுதியையும், இரண்டாவது தொகுதியின் XIII ஆம் பகுதியையும், ஐந்தாவது தொகுதியின் VI ஆம் பகுதியையும்

சமர்ப்பித்ததுடன், இவ்வறிக்கைகளை அச்சிடுவதற்கு பாராளுமன்றம் அனுமதியளித்தது.

**பத்திரங்கள் சமர்ப்பித்தல்**

(i) 2013 ஆம் ஆண்டுக்கான ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையின் ஆண்டறிக்கை

(ii) 2015 ஆம் ஆண்டுக்கான ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகம்
(iii) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்கான சட்டமா அதிபதி திணைக்களம்

ஆகியவற்றின் செயலாற்றுகை அறிக்கைகள்

**மனுக்களைச் சமர்ப்பித்தல்**

பின்வரும் பாராளுமன்ற உறுப்பினர்களினால் பொதுமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டன:-

(i) கௌரவ எஸ். பீ. திசாநாயக்க
(ii) கௌரவ கபீர் ஹஷீம் - இரண்டு மனுக்கள்
(iii) கௌரவ அநுர திசாநாயக்க
(iv) கௌரவ அஜித் மான்னப்பெரும - இரண்டு மனுக்கள்

(மனுக்கள் பொதுமனுக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படும்)

**நிலையியற் கட்டளை 23(2) இன் கீழான வினாக்கள்**

கௌரவ தினேஷ் குணவர்தன அவர்கள்

அரச துறை மற்றும் இராஜதந்திர சேவையில் உயர் பதவிகளுக்கு நியமிப்பவர்களின் தகுதியினை கருத்திற் கொள்வதில் தாமதம் பற்றியது

**<u>தனியார் உறுப்பினர்கள் சட்டமூலங்கள்</u>**

கௌரவ கே. காதர் மஸ்தான் அவர்களுக்கு **"பேர்ட்டி திஸாநாயக்க மன்ற (கூட்டிணைத்தல்)"** சட்டமூலத்தை சமர்ப்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

நிலையியற் கட்டளை 47(5) இன் கீழ் பாராளுமன்றத்திற்கு அறிக்கை செய்வதற்கு மேற்சொன்ன சட்டமூலங்கள் சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சருக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**<u>இன்றைய தினத்திற்கான சபையின் பிரதான அலுவல்கள்</u>**

**இறப்புக்களின் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம்**

சபையால் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது.

**<u>ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை</u>**

"உள்ளூராட்சி மன்ற தேர்தலினை நடத்தாமை" எனும் ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை கௌரவ பந்துல குணவர்தன அவர்களால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதனையடுத்து, 1830 மணியளவில் பாராளுமன்றம் 2016 ஆகஸ்ட் 26ஆந் திகதி வெள்ளிக்கிழமை 1030 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

** இது ஒரு திருத்தப்படாத பதிப்பாகும். இத்தினத்தின் அலுவல்களின் அதிகார அறிக்கைக்காக தயவுசெய்து ஹன்சாட் அறிக்கையைப் பார்க்கவும்.*